# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

## S.C.No.118/2014

## PROSECUTION WITNESS No - PW- 12

Name : அழகுமுத்து Caste:

Father Name Calling:

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of April 2026.

4, 6 மற்றும் 9 ம் எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

**அரசு தரப்பில் இவ்வழக்கின் விசாரணை அலுவலர்கள் LW 30, LW 31 மற்றும் LW 32 இறந்துவிட்டதாகவும் தற்சமயம் நிலைய பொறுப்பில் இருக்கும் காவல் ஆய்வாளர் திரு.அழகுமுத்து என்பவரை சாட்சியாக விசாரிக்க வேண்டி அரசு தரப்பில் மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் முதல் விசாரணை** :

நான் தற்போது சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். காளையார்கோவில் வழக்கு கோப்புகளை பராமரிப்பவர் என்ற முறையில் தற்சமயம் சமூகம் நீதிமன்றத்தில் நடந்து வரும் நிலைய குற்ற எண்.333/2000 வழக்கின் மூல அமர்வு வழக்கு எண். 5/2005 ஆனது ஒரு பகுதி முடிவுற்று தீர்ப்பு பகரப்பட்ட நிலையில் அதன் தொடர்ச்சியாக நிலுவையில் உள்ள எதிரிகள் காளீஸ்வரன், அய்யப்பன், மணி (எ) சுப்ரமணி, பச்சைப்பிள்ளை (எ) பெருமாள் ஆகியோர்கள் மீது தற்போது நடந்து வரும் வழக்கில் இவ்வழக்கின் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை தயாரித்த இ.கிருஷ்ணன் என்ற தலைமை காவலர், விசாணை அலுவலர்கள்

திரு.மங்களேஸ்வரன் மற்றும் திரு.சுப.மாரியப்பன் ஆகியோர்கள் இறந்து விட்ட நிலையிலும் கோப்புகளின் அடிப்படையிலும் நான் சாட்சி சொல்கிறேன். கடந்த 13.6.2000 ம் தேதி அன்று நிலைய குற்ற எண். 333/2000 இ.த.ச. பிரிவுகள் 147,148,341,324, 307, 506 (ii), 302 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.35** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கையையும் புகார்தாரரான காங்கேயவேலு கொடுத்த வாய்மொழி புகாரையும் சிவகங்கை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு முதுநிலை காவலர் முத்தையா மூலம் அனுப்பியுள்ளார். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார். மேலும் வழக்கின் கோப்பினை அப்போதைய காவல் ஆய்வாளர் மாரியப்பன் அவர்களின் பார்வைக்கு புலன்விசாரணைக்காக ஒப்படைத்துள்ளார். அதன்பின்பு முதுநிலை காவலரான முத்து என்பவர் காளையார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 333/2000 இ.த.ச. பிரிவு 302 கொலை வழக்கில் இறந்துபோன ஜெகசுப்பிரமணியன் என்ற பழனியின் பிரேதத்தை மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்வதற்கு காளையார்கோவில் காவல் ஆய்வாளர் கொடுத்த ஒரு வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார். மேற்படி முத்து என்ற முதுநிலை காவலர் பிரேத பரிசோதனை செய்த பின்னர் பிரேதத்தை அவரது உறவினரிடம் ஒப்படைத்துள்ளார். பிரேதத்தின் மீது எடுக்கப்பட்ட 4 முழு வேஸ்டி – புளூகலர் பார்டர் போட்டது, வெள்ளைகலர் அரைக்கை சட்டை, முண்டாவெள்ளை பனியன் - 1 , ஆகியவற்றை கைப்பற்றி காவல்நிலையம் கொண்டுவந்து காவல் ஆய்வாளரிடம் அறிக்கை மூலம் ஒப்படைத்துள்ளார். மேற்படி 4 முழு வேஸ்டி – புளூகலர் பார்டர் போட்டது. **சா.பொ.1** ஆகவும் , வெள்ளைகலர் அரைக்கை சட்டை,

**சா.பொ. 2** ஆகவும், முண்டாவெள்ளை பனியன் - 1 **சா.பொ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் மாரியப்பன் என்பவர் தலைமை காவலர் கிருஷ்ணன் என்பவர் பதியப்பெற்ற முதல் தகவல் அறிக்கையை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான நாகராஜன், சந்திரன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ.36** மற்றும் வரைபடம். **அ.சா.ஆ.37** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் 17.45 மணிக்கு சாட்சிகள் சந்திரன் நாகராஜன் முன்னிலையில் மாதிரிக்கு ரத்தம்பட்ட மண் ரத்தம்படாத மண் ஆகியவற்றை குறித்து அத்தாட்சி தயார் செய்துள்ளார் . மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.38** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரத்தம்பட்ட மண் **சா.பொ.4** ஆகவும், ரத்தம்படாத மண் **சா.பொ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அதே சாட்சிகள் முன்னிலையில் 17.15 மணிக்கு 1 ½ நீளமுள்ள ரத்தக்கரை படிந்த உடைந்த உருட்டுக்கட்டை -1, சுமார் 1 அடி நீளமுள்ள ரத்தக்கரை படிந்த உருட்டுக்கட்டை- 1, கருப்பு கலர் காதி கிராப்ட் செருப்பு – 1 ஜோடி ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.39** ஆக குறியீடு செய்யப்படுகிறது. . 1 ½ நீளமுள்ள ரத்தக்கரை படிந்த உடைந்த உருட்டுக்கட்டை -1 **சா.பொ6** ஆகவும், சுமார் 1 அடி நீளமுள்ள ரத்தக் கரை படிந்த உருட்டுக்கட்டை -1 **சா.பொ.7** ஆகவும், கருப்பு கலர் காதிகிராப்ட் செருப்பு – 1 ஜோடி **சா.பொ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இறந்த பழனி என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பிரேத விசாரணையை மாரியப்பன் என்ற காவல் ஆய்வாளர் மேற்கொண்டுள்ளார். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.40** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணையை முடித்து பிரேதத்தை காவலர் முத்து என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் சாட்சிகள்

காங்கேயவேல், சீதா, தாழையம்மாள், மயில்வாகனம் மற்றும் பிற சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் கடந்த 19.06.2000 ம் தேதி மயிலாடுதுரை நீதிமன்றத்தில் வழக்கின் ஆஜர் எதிரிகளான பன்னீர் செல்வம், காளீஸ்வரன், பச்சைப்பிள்ளை (எ) பெருமாள், முத்து (எ) முத்துவயிரவன், கோபு (எ) கோபால் ஆகியோர்கள் சரணடைந்து சிறையில் இருந்த நிலையில் அவர்களை உரிய நீதிமன்றத்தை அணுகி மனு செய்து கடந்த 28.06.2000 ல் போலிஸ் காவலில் எடுத்து விசாரித்த போது அன்றையே தினமே எதிரி முத்து (எ) முத்துவயிரவன் சாட்சிகள் சந்திரன் மற்றும் கோபால் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் சைக்கிள் மற்றும் டிராக்டர் ஆகியவற்றையும் அவற்றை மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.41**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி டிராக்டர் குறித்த அத்தாட்சி அ.சா.ஆ.14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுள்ளது . மேற்படி டிராக்டர் **சா.பொ.9** ஆகவும் டிரெய்லர் **சா.பொ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 28.06.2000 ம் தேதி எதிரி காளீஸ்வரன் என்பவர் சாட்சிகள் சந்திரன் மற்றும் கோபால் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் 4 சைக்கிள்கள் மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.42** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 4 சைக்கிள்கள் குறித்த அத்தாட்சி அ.சா.ஆ.15 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுள்ளது. மேற்படி 4 சைக்கிள்கள் முறையே வரிசையாக **சா.பொ.11** முதல் **சா.பொ.14** வரை குறியீடு செய்யப்படுகிறது.கடந்த 29.06.2000 ம் தேதி எதிரி

பன்னீர் செல்வம் சாட்சிகள் சந்திரன் மற்றும் கோபால் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் இரும்பு அருவாளை மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.43**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரும்பு அருவாள் குறித்த அத்தாட்சி **அ.சா.ஆ.44** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரும்பு அருவாள் **சா.பொ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே எதிரி பச்சைப்பிள்ளை (எ) பெருமாள் சாட்சிகள் சந்திரன் மற்றும் கோபால் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் சைக்கிள் செயினை மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.45** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சைக்கிள் செயின் குறித்த அத்தாட்சி **அ.சா.ஆ.46** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சைக்கிள் செயின் **சா.பொ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையே தினமே எதிரி கோபு சாட்சிகள் சந்திரன் மற்றும் கோபால் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் சுமார் 92 செ.மீ அளவுள்ள வளைந்த கம்பை மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.47** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சுமார் 92 செ.மீ அளவுள்ள வளைந்த கம்பு குறித்த அத்தாட்சி **அ.சா.ஆ.48** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சுமார் 92 செ.மீ அளவுள்ள வளைந்த கம்பு **சா.பொ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கின் எதிரிகளான

ராமு, மணி (எ) சுப்ரமணி, ஸ்டாலின், அய்யப்பன் ஆகியோர்கள் கடந்த 10.07.2000 ம் தேதியில் திருவாரூர் நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய காவல் அடைப்பில் இருந்த நிலையில் கடந்த 03.08.2000 ம் தேதியில் மதியம் 12.45 மணிக்கு எதிரி ராமு (எ) ராமன் போலிஸ் காவலில் எடுத்து சாட்சிகள் திருநாவுகரசு, காசி விஸ்வநாதன் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் இரும்பு அருவாளை மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.49** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரும்பு அருவாள் குறித்த அத்தாட்சி **அ.சா.ஆ.50** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரும்பு அருவாள் **சா.பொ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.08.2000 தேதி எதிரி மணி (எ) சுப்பிரமணியம் திருநாவுகரசு, காசி விஸ்வநாதன் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் இரும்பு கத்தி மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.51** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரும்பு கத்தி குறித்த அத்தாட்சி **அ.சா.ஆ.52** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரும்பு கத்தி **சா.பொ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.08.2000 தேதி எதிரி ஸ்டாலின் என்பவர் திருநாவுகரசு, காசி விஸ்வநாதன் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கும் 2 அடி நீளம் 9 அங்கலம் ஒரு தடி கம்பு மறைத்து வைத்த இடத்தையும் காட்டுவதாக சொல்லி அவரை அழைத்து சென்று மேற்படி பொருட்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.53** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 2 அடி நீளம் 9 அங்கலம் ஒரு தடி கம்பு குறித்த அத்தாட்சி **அ.சா.ஆ.54** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 2 அடி நீளம் 9 அங்கலம் ஒரு தடிக்கம்பு **சா.பொ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.08.2000 தேதி எதிரி அய்யப்பன் என்பவர் திருநாவுகரசு, காசி விஸ்வநாதன் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.55** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட **சா.பொ.1** முதல் **சா.பொ.20** வரையிலான வழக்குச் சொத்துக்களை படிவம் - 91 மூலம் காவல் ஆய்வாளர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி படிவங்கள்-91 (12 எண்ணிக்கைகள்) முறையே **அ.சா.ஆ.56** முதல் **அ.சா.ஆ.67** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 26.07.2000 ம் தேதி ஏற்கனவே உரிய நீதிமன்றத்தில் பெற்ற அனுமதியின் பேரில் திருச்சி மத்திய சிறையில் அடையாள அணி வகுப்பு நடத்தப்பட்டு அதில் இவ்வழக்கின் சாட்சிகள் இறந்து போன காங்கேயவேலு மற்றும் இவ்வழக்கின் சாட்சி 1. சீதா ஆகியோர் அடையாளம் காட்ட கோபு (எ) கோபால் மற்றும் அய்யப்பன் ஆகியோர் அடையாளம் காட்டப்பட்டனர். மேற்படி அடையாள அணி வகுப்பு அறிக்கை **அ.சா.ஆ.68** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள், அத்தாட்சிகள், சான்றுபொருட்கள் மற்றும் உள்ள ஆவணங்கள் ஆகியவை குறித்து தற்போது சாட்சியம் அளித்துள்ள இந்த சாட்சிக்கு நேரடியாக தெரியாது என்பதால் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்காக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபனை செய்யப்பட்டது.)

மேலும் இவ்வழக்கில் விசாரணை அதிகாரி சாட்சிகள் இறந்த போன காங்கேயவேலு, 1ம் சாட்சி சீதா, சாட்சி சுதாகரன், தாழையம்மாள், மயில்வாகனன் (எ) சூரியன், குருபாதம், முத்துவயிறு, கொன்னமுத்து, தியாகரசன், செந்தாமரை, மெய்ஞானமூர்த்தி, முனியசாமி,

ராமசந்திரன், மகாலிங்கம், முருகன், சின்னாள், நாகராஜன், சந்திரன், கோபால், திருநாவுக்கரசு, காசிவிஸ்வாநதன், வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன் மற்றும் இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் மனோகரன், இறந்தவர் உடல் மீது பிரேத பரிசோதானை மேற்கொண்ட மருத்துவர் மகேஷ்வரன், காயம்பட்டவருக்கு மதுரையில் மேல்சிகிச்சை பார்த்த மருத்துவர் தமோதரன், அடையாள அணி வகுப்பு நடத்திய நீதித்துறை நடுவர் 2, சிவகங்கை, திரு.சேது, முதுநிலை காவலர் முத்து, முதுநிலை காவலர் சுப்பையா, தலைமை காவலர் முத்துகிருஷ்ணன் மற்றும் இவ்வழக்கில் தற்போது இறந்து போன முதல் தகவல் அறிக்கை தாயரித்த தலைமை காவலர் 460 இ.கிருஷ்ணன் மற்றும் இவ்வழக்கில் தொடர்புடைய பஞ்சாயத்து தொடர்பான வழக்கு விசாரித்த இறந்து போன காவல் ஆய்வாளர் மங்களேஸ்வரன் ஆகியோர்களை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் தற்சமயம் இறந்து போனவருமான காவல் ஆய்வாளர் மாரியப்பன் விசாரித்து தனது விசாரணையை முடித்து அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்து இதச பிரிவு 147,148,341,324, 307, 506 (ii) மற்றும் 34, 302 உ/இ. 149 ஆகிய பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் சாட்சிகள் சுதாகரன், மகாலிங்கம், முத்துவயிறு, திருநாவுக்கரசு ஆகியோர்கள் விசாரணையின் போது சொன்ன செய்திகளைத்தான் ஆய்வாளர் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் எப்போது முதல் காளையார்கோவில் காவல் நிலைய ஆய்வாளராக இருக்கிறேன் என்றால் கடந்த 20.02.2026 லிருந்து காளையார்கோவில் காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்திலிருந்து இறுதி புலன் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை நான்

காளையார்கோவில் காவல் நிலையத்தில் எந்த பொறுப்பிலும் பணியாற்றவில்லை என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் இருக்கக்கூடிய LW 30, LW 31 மற்றும் LW 32 ஆகியோரது கையெழுத்துக்கள் நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுக்கு கீழ் நான் எப்போதாவது பணி செய்தேனா என்றால் நான் பணி செய்ததில்லை. LW 30, LW 31 மற்றும் LW 32 இந்த மூன்று சாட்சிகளும் ஏற்கனவே நடந்த மூல அமர்வு வழக்கு எண். 5/2005 ல் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் LW 30 மற்றும் LW 32 ஆகியோர்கள் மட்டும் நீதிமன்றத்தில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் நேரடியாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி மூல அமர்வு வழக்கு எண். 5/2005 உள்ள எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதன்பேரில் எந்த மேல்முறையீடும் அரசு தரப்பில் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட காளீஸ்வரன் தவிர மற்ற 3 எதிரிகள் அனைவருக்கும் சொந்த ஊர் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுகா, பேரளம் கிராமம் என்றால் சரிதான். மேற்படி 3 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் அவர்கள் வேண்டுமென்றெ இந்த வழக்கில் உள்நோக்கத்துடன் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரியாக உள்ள காளீஸ்வரன் சம்பவ காலத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுகா, பேரளம் கிராமம் சென்று அங்கு நிரந்தரமாக தங்கி விவசாய வேலை பார்த்து வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் கண்ட 4 எதிரிகளும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது போல எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அவர்கள் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளபடி எந்தவித ஆயுதங்களையும் எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றும் அவர்களுக்கு எதிராக பொய்யாக

ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி காளீஸ்வரன் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் அவர் எந்த நபரையும் தாக்கி காயப்படுத்தவில்லை என்றும் எதிரி காளீஸ்வரன் இவ்வழக்கில் இறந்து போன 1ம் எதிரி பன்னீர் செல்வத்தின் மகன் என்பதால் அவரை இவ்வழக்கில் வேண்டுமென்றே இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. மூல அமர்வு வழக்கு எண்.5/2005 ல் 1ம் எதிரி பன்னீர்செல்வம் இந்த வழக்கில் கண்ட சாட்சிகள் சிலர் மற்றும் அவர்களை சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டு அந்த நபர்களின் மீது கொலை வழக்கு நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அடையாள அணிவகுப்பிற்கு நடைபெறுவதற்கு முன்னதாகவே சாட்சிகள் காங்கேயவேலு, சீதா ஆகியோருக்கு எதிரிகளின் புகைப்படத்தை காட்டியும் எதிரிகள் நீதிமன்றத்திற்கு வாய்தா சமயத்தில் வரும்போது பலமுறை அடையாளம் காட்டி அதன் அடிப்படையில் போலிசார் சொல்லிக்கொடுத்து எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 16:36:28 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை